பக்கங்கள்:-18

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 03 | வெள்ளிக்கிழமை | 20.10.2023 | அதிர்வு 80 |
|---|---|---|---|---|---|

## வடக்கு - கிழக்கில் இன்று ஹர்த்தால்

தமிழ்க் கட்சிகளின் அழைப்புக்கிணங்க வடக்கு - கிழக்கில் இன்று ஹர்த்தால் இடம்பெறவுள்ளது.

இன்றைய ஹர்த்தால் வெற்றியடைய அனைத்துத் தரப்பினரும் 02

## அரசின் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராக ஐ.நா. விசேட அறிக்கையாளர்கள் போர்க்கொடி!

இலங்கை அரசால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமானது ஏற்கனவே நடைமுறையிலுள்ள மிக மோசமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவில்லை எனச் சுட்டிக் காட்டியுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் மற்றும் விசேட அறிக்கையாளர்கள், இச்சட்டமூலத்தின் பெரும்பாலான சரத்துக்கள் சமூகத்தின் மத்தியிலிருந்து பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்குப் பின்பற்றப்பட வேண்டிய சட்டத்தின் ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட செயன்முறைக்கு முற்றிலும் மாறுபட்டவையாகவே அமைந்திருப்பதாகக் கரிசனை வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் 03




## இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்க ஐ.நாவின் தலையீட்டைக் கோரும் இலங்கை

### — வதிவிடப் பிரதிநிதியுடன் டக்ளஸ் பேச்சு —



**கொழும்பு, ஒக். 20**

**இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைத் தடுக்க ஐ.நாவின் தலையீட்டை அரசு கோரியுள்ளது.**

**அரசின் சார்பில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.** 03

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின் நீதிமன்றை நாடலாம்

### 14 நாள்கள் கால அவகாசம் வழங்கப்படும் என்கிறார் நீதி அமைச்சர்



– சுடர் திலீபன் –

"பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் முதலாம் வாசிப்புக்காகச் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நாட்டு மக்கள் எவரும் உயர்நீதிமன்றத்தை நாட முடியும். அதற்கு 14 நாள்கள் கால அவகாசம் வழங்கப்படும்."

– இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்தபோதே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவிக்கையில்,

"நாடாளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கடந்த வாரம் நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்வாங்கப்படும் சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தும் கால அவகாசம் தொடர்பில் கேள்வி எழுப்பினார்கள். 02

## மட்டு.பொலிஸாருடன் நேற்றும் அம்பிட்டிய தேரர் வாக்குவாதம்!

### புத்தர் சிலையைத் தான் பார்க்க வேண்டும் என்றும் சண்டித்தனம்



– மட்டக்களப்பு நிருபர்கள் –

புத்தர் சிலையைத் தான் பார்க்க வேண்டும் எனவும், அங்கு தான் செல்ல அனுமதிக்க வேண்டும் எனவும் அம்பிட்டிய சுமண ரத்தன தேரர் பொலிஸார் மற்றும் 02




**காணிகளை மீட்போம்!**

கீரிமலை நகுலேஸ்வரத்தை அண்டி, சைவ சமய புராதன கட்டமைப்புகள் கொண்ட பிரதேசத்தை யுத்த காலத்தில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அரச படைகள் ஆக்கிரமித்து வைத்திருந்த போது, அங்கிருந்த தனியார் காணிகளில் தன் இஷ்டப்படி ஜனாதிபதி மாளிகை ஒன்றை கட்டியது அரசு.

இப்போது யுத்தம் முடிந்து, உயர் 02

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதுகாப்பு வலயங்களைக் கைவிட வேண்டிய நிலையில், அந்த ஜனாதிபதி மாளிகையை சர்ச்சைக்குரிய தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு ஐம்பது வருடக் குத்தகைக்கு அரசு கையளித்திருக்கின்றது.

இந்தக் கையளிப்பு சட்டவிரோதமான நடவடிக்கை என்று சுட்டுகின்றன சட்ட வட்டாரங்கள்.

காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் பொதுத் தேவை ஒன்றுக்காக காணிகளை அரசு சுவீகரித்துக் கொள்ள முடியும். ஆனால் அந்த சுவீகரிப்பு நடவடிக்கை நீண்ட செயற்பாடு. தற்போது கீரிமலை நகுலேஸ்வரத்தில் ஜனாதிபதி மாளிகை கட்டப்பட்டுள்ள காணிகள் தனியாருக்குரியவை. அவை தொடர்பான காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் இன்னும் நடைபெற்று முடியவில்லை.

எனினும், பொதுத் தேவைக்காக ஒரு காணி அரசுக்குத் தேவைப்படுமாயின் அந்தக் காணி சுவீகரிப்பு தொடர்பான சட்ட நடவடிக்கை ஆரம்பமானதும் – அது சட்ட ரீதியாகப் பூர்த்தியடைய முன்னரும் – அந்தப் பொதுத்தேவையின் அவசரம் மற்றும் அவசியம் கருதி அத்தகைய காணியின் உடைமையை (Possession) அரசு எடுத்துக் கொள்ள முடியும் என காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 38 (8) பிரிவு கூறுகிறது. கீரிமலையில் ஜனாதிபதி மாளிகை கட்டப்பட்ட நிலப்பகுதிகளின் சுவீகரிப்பு இன்னும் சட்ட ரீதியாகப் பூர்த்தியாகவில்லை. ஆரம்பிக்கப்பட்ட நிலையிலே அது உள்ளது. அவ்வளவுதான். எனினும் மேற்படி 38(8) பிரிவின் கீழ் அக்காணிகளைத் தன் உடைமையில் எடுத்துக் கொண்ட அரசு, அதைப் பயன்படுத்தி ஜனாதிபதி மாளிகையை கட்டியுள்ளது. இப்போது தனக்கு அது தேவையில்லை என்று வெளி நிறுவனம் ஒன்றுக்குக் குத்தகைக்கு விடுகின்றது.

ஆகவே, அக்காணிகள் 'பொதுத் தேவைக்கு' அவசியமானவை என்று இனியும் வாதாட முடியாத நிலைமை அரசுத் தரப்புக்கு ஏற்பட்டுள்ளது. அரசினுடைய பொதுத் தேவைக்கு அந்த காணியில் உள்ள கட்டடம் அவசியம் அல்ல என்ற காரணத்தினால்தான் வெளித் தரப்புக்கு அதனை அரசு குத்தகைக்கு விடுகின்றது.

எனவே 'பொதுத்தேவைக்கு அவசியம்' என்ற பெயரில் அந்த காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கையை இனியும் அரசு முன்னெடுக்க முடியாது.

அப்படி முன்னெடுத்தால் அதனைச் சட்டச் சவாலுக்கு உட்படுத்தி அரசின் உடமையில் இருந்து அந்த காணியை இலகுவாக மீளப் பெற முடியும். அப்படி பெறுவதற்கு இவ்விடயங்களை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வது அவசியம். அதற்கு மேற்படி காணியின் உரிமையாளர்கள் சம்மதிக்க வேண்டும். சட்டத்தின் மூலம் தத்தமது காணிகளை மீட்பதற்கான முயற்சிகளுக்கு இணங்கி, ஒத்துழைத்துச் செயற்பட முன் அவர்கள் முன் வர வேண்டும்.

அவ்வாறான வழக்குகளை பொறுப்பேற்று நடத்துவதற்கு ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் போன்றோர் தயார்.

காணியின் சொந்தக்காரர்கள் தயாரா? அதுதான் இப்போது தொக்கி நிற்கும் பிரதான கேள்வி.

## மட்டு. பொலிஸாருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராணுவத்தினருடன் நேற்று வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

மட்டக்களப்பு, மயிலத்தமடு – மாதவனைப் பகுதியில் அண்மையில் அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராத யஹம்பத் உள்ளிட்ட குழுவினர் புத்தர் சிலையை வைத்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த புத்தர் சிலை அங்கு இல்லையெனச் செய்திகள் வெளியிக்கி இருந்த நிலையில், அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் குறித்த இடத்துக்கு நேற்று வானில் சென்றுள்ளார்.

ஆனால், அங்கு பதற்ற நிலைமை உருவாகும் சாத்தியம் காணப்பட்டதால் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இதனால் குறித்த பகுதிக்குச் செல்வதற்கு அம்பிட்டிய சுமண ரத்தன தேரருக்குப் பொலிஸார் அனுமதி வழங்கவில்லை.

இந்நிலையிலேயே, "புத்தர் சிலையை நான் பார்க்க வேண்டும். அங்கு செல்ல எனக்கு அனுமதி வழங்க வேண்டும்" – என்று பொலிஸாருடன் அவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

"பன்சாலைக்குச் செல்வதற்குத்தான் உங்களிடம் கேட்டேன். ஆனால், நீங்கள் என்னைப் பன்சாலைக்குப் போகவிடாமல் தடுக்கின்றீர்கள். நான் அணிந்திருக்கும் காவி உடைக்கு நீங்கள் மரியாதை வழங்குகின்றீர்கள் இல்லை" – என்று பொலிஸார் முன்னிலையில் தேரர் கூறினார்.

அதற்குப் பொலிஸார், "நாம் மரியாதை வழங்குகின்றோம்" – என்று தெரிவித்தனர்.

அதற்குத்தேரர்,"மரியாதைவழங்குகின்றீர்கள்என்றால்ஏன்என்னைப்பன்சாலைக்குச் செல்ல அனுமதிக்கின்றீர்கள் இல்லை" – என்று கேட்டார்.

அதற்கு, "அங்கு ஒரு பிரச்சினை இருக்கின்றது என்பது உங்களுக்கும் தெரியும் எங்களுக்கும் தெரியும்" – என்று தேரரிடம் பொலிஸார் கூறினர்.

"சாணக்கியன் குழுவினரே புத்தர் சிலையை புதன்கிழமை (18) இரவு எடுத்துச் சென்றுள்ளனர்" – என்று தேரர் தெரிவித்தார்.

"காக்கிச் சட்டை அணிந்த பொலிஸார் கிழக்கு மாகாணத்தில் எங்களை எந்த இடத்துக்கும் செல்ல அனுமதிக்க மறுக்கின்றனர்" – என்றும் அம்பிட்டிய சுமண ரத்தன தேரர் கூறினார்.

"நாடாளுமன்றத்தில் சாணக்கியன் பொய்களைக் கூறுகின்றார். நாம் இதுவரைக்கும் எந்த அரசியல்வாதிகளுடனும் இணைந்து செயற்படவில்லை" – என்று தேரர் மேலும் தெரிவித்தார்.

## பயங்கரவாத எதிர்ப்புச்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. குறிப்பிட்ட விடயங்களை ஏற்றுக்கொள்கின்றேன். 2023.10.03 ஆம் திகதி நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஆகியன உள்ளடக்கப்பட்டிருந்தன. இவ்விரு சட்டமூலங்களும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சர்ச்சைக்குட்படுத்தப்பட்டன.

சர்ச்சைக்குள்ளாக்கப்பட்ட இரண்டு சட்டமூலங்களை ஒரே தடவையாகச் சபைக்குச் சமர்ப்பித்தால் பெரும்பாலானோர் நீதிமன்றத்தை நாடுவார்கள். இதனால் நீதிமன்றத்தின் செயற்பாடுகள் மறைமுகமாகப் பாதிக்கப்படும் என்பதால் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை முதலாம் வாசிப்புக்காக சமர்ப்பிப்பதைத் தாமதப்படுத்தினேன். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்தார்.

சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தும் கால அவகாசம் 7 நாட்களாக அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் வரையறுக்கப்பட்டது. இதனை 21 ஆவது திருத்தத்தில் 14 நாட்களாக நாங்கள் விரிவுபடுத்தினோம். ஆகவே, உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் முதலாம் வாசிப்புக்காகச் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நாட்டு மக்கள் எவரும் உயர்நீதிமன்றத்தை நாட முடியும். அதற்கு 14 நாள்கள் கால அவகாசம் வழங்கப்படும்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் சபாநாயகரின் நிலைப்பாட்டை உயர்நீதிமன்றம் கோரியுள்ளது. மறுபுறம் அரசின் நிலைப்பாட்டை சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிப்பார்." – என்றார்.

## வடக்கு - கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று 8 தமிழ்க் கட்சிகள் கூட்டாகக் கோரியுள்ளன.

"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டித்தும், இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியாக அனுபவித்து வரும் அநீதிகளையும், நீதி மறுக்கப்படுவதையும் உலகத்தின் கவனத்துக்கு மீண்டும் கொண்டு வரும் நோக்கத்துடனும், எமது மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு அவற்றில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதைக் கண்டித்தும், மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரவையை ஆக்கிரமித்து இருப்பவெளியேறக் கோரியும், எமது தாயகமான வடக்கு – கிழக்கு மாகாணங்களில் இன்று ஹர்த்தால் எனப்படும் ஒரு பொது முடக்கத்துக்குத் தமிழ்த் தேசியக் கட்சிகளாகிய நாம் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்துள்ளோம். எனவே, ஹர்த்தால் இன்று வெற்றியடைய சகல தரப்பினரும் ஆதரவையும், ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம்" – என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி , ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகியன இணைந்து கோரியுள்ளன.

# சீன உயர்மட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் ரணில் பேச்சு

சீனாவுக்கான நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று சீன தொலைதொடர்பாடல் நிர்மாணக் கூட்டுத்தாபனம், சினோபெக் நிறுவனம், பி.வை.டி. நிறுவனம் உள்ளிட்ட உயர்மட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இலங்கையின் எதிர்கால முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

துறைமுக நகரத்தை சர்வதேச நிதி மத்தியஸ்தானமாக மாற்றியமைத்தல், துறைமுக நகரத்திற்கான புதிய சட்ட திட்டங்களை உருவாக்குதல், துறைமுக நகரத்துக்காக மட்டுப்படுத்தப்பட்ட நீதி மன்ற மற்றும் வழிக்காட்டல் முறைமைகளை உருவாக்குதல் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

அதேபோல் இலங்கையின் போக்குவரத்துக் கட்டமைப்பை மின்சாரத்தின் ஊடாக இயக்குதல், மின் வாகன பாகங்களை ஒழுங்கமைத்தல், மின்சார ரயில் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முடிந்த வகையில் உயரிய பங்களிப்பை வழங்குவதாகவும், இலங்கையின் முதலீட்டு வாய்ப்புக்களை பயன்படுத்திக்கொள்வதாகவும் முதலீட்டாளர்கள் ஜனாதிபதியிடத்தில் உறுதியளித்தனர்.

ஜனாதிபதியுடன் இலங்கை தூதுக் குழுவினரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## அரசின் உத்தேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டத்துக்குப் பதிலீடாக அரசால் முன்மொழியப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் தமது கரிசனைகளை வெளிப்படுத்தி பயங்கரவாதத்தை ஒழிப்பதுடன் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான ஐ.நா. விசேட அறிக்கையாளர் ஃபியோனுவாலா ஆலெய்ன், அமைதியான முறையில் ஒன்றுகூடும் சுதந்திரத்துக்கான உரிமை தொடர்பான ஐ.நா. விசேட அறிக்கையாளர் கிளெமென்ற் நியலெற்சொஸி வோல், மனித உரிமைகள் பாதுகாவலர்களின் நிலை தொடர்பான ஐ.நா. விசேட அறிக்கையாளர் மேரி லோலொர், வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் தொடர்பான ஐ.நா. செயற்பாட்டுக்குழுவின் தலைமை அறிக்கையாளர் ஓவா போல்டே, உப அறிக்கையாளர் கேப்ரியெல்லா சிற்ரோனி மற்றும் உறுப்பினர்கள், நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுதந்திரம் தொடர்பான ஐ.நா. விசேட அறிக்கையாளர் மார்க்ரெற் சற்றர்த்வெய்ற், சட்டவிரோத அல்லது தன்னிச்சையான கொலைகள் தொடர்பான ஐ.நா. விசேட அறிக்கையாளர் மொரிஸ் டிட்போல்-பின்ஸ், மத அல்லது நம்பிக்கைகளுக்கான சுதந்திரம் தொடர்பான ஐ.நா. விசேட அறிக்கையாளர் நஸிலா கானியா மற்றும் கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரத்தை பாதுகாத்தல் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் ஐரின் கான் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது:-

"மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும், சுயாதீன மேற்பார்வையிலும் நிலவும் குறைபாடுகளின் விளைவாக தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டமானது சர்வதேச சட்டத்துக்கு முரணான வகையில் அமைந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்களாலும் ஏனைய சர்வதேச பல்தரப்புக் கட்டமைப்புக்களாலும் பல வருடகாலமாக சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. இருப்பினும் இக்குறைபாடுகளை தற்போது முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலம் நிவர்த்திசெய்யவில்லை என்பது மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்துகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தவறான பிரயோகம் மற்றும் அதனூடாக வழங்கப்பட்டுள்ள மட்டுமீறிய அதிகாரங்கள் என்பன நாட்டிலுள்ள அரசியல் விமர்சகர்களையும், எதிர்ப்பாளர்களையும், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களையும் ஒடுக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்ற கரிசனை நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. பலர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் எவ்வித வழக்கு விசாரணைகளுமின்றி பல வருடகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி திருத்தங்களுடன்கூடிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமானது மனித உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் உள்ளடக்கியிருக்க வேண்டிய முக்கிய காரணிகளை நாம் ஏற்கனவே வெளியிட்டிருந்தோம். "பயங்கரவாதம்" எனும் பதத்துக்கான வரைவிலக்கணத்தை சர்வதேச நியமங்களுக்கு அமைவாக மாற்றியமைத்தல், இச்சட்டம் குறிப்பாக கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் மற்றும் மதம் சார்ந்த நம்பிக்கைகள் என்பவற்றைப் பாதிக்குமாயின் அவ்வேளையில் அச்சட்டத்தைப் பிரயோகிப்பதற்கான அவசியத்தன்மை, தன்னிச்சையான முறையில் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுவதைத் தடுத்தல், சித்திரவதைகள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்படல்களைத் தடுப்பதற்கு அவசியமான சரத்துக்கள் உள்ளடங்கியிருப்பதை உறுதி செய்தல், நியாயமான வழக்கு விசாரணை செயன்முறையை உறுதி செய்தல் என்பன அக்காரணிகளில் உள்ளடக்கியிருந்தன.

இருப்பினும் தற்போது முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தில் "பயங்கரவாதம்" எனும் பதத்துக்கான பரந்துபட்ட வரைவிலக்கணத்தில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான மாறுதல்களே செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய இடங்களுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாக உத்தேச சட்டமூலத்தில் சேர்க்கப்பட்டுள்ள "புதிய பயங்கரவாதக்குற்றங்கள்" மிகுந்த கரிசனைகளைத் தோற்றுவித்துள்ளன.

அதேபோன்று புதிய சட்டமூலத்தின் பிரகாரம் குறைந்தளவிலான நீதிமன்ற மேற்பார்வையும், பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள பரந்தளவிலான அதிகாரங்களும் கவலையளிக்கின்றன. குறிப்பாக "குற்றமிழைத்திருக்கக்கூடும்" என்ற சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்யும்போது பின்பற்றப்படவேண்டிய செயன்முறைகள் தொடர்பான சரத்துக்கள் இச்சட்டமூலத்தில் வலுவிழக்கச்செய்யப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபர்கள் சித்திரவதைகளுக்கும், முறையற்ற நடத்தைகளுக்கும் உள்ளாக்கப்படுவதைத் தடுப்பதற்கு அவசியமான போதியளவு அதிகாரங்கள் இச்சட்டமூலத்தின் ஊடாக நீதிவானுக்கு வழங்கப்படவில்லை.

எனவே, இது (பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம்) மிகவும் பின்னடைவான நடவடிக்கை என்பதுடன் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய குற்றங்களுக்காகக் கைதுசெய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் நபர்களுக்கு இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆவணப்படுத்தலைப் புறக்கணித்திருக்கின்றது. அத்தோடு இதன் சரத்துக்கள் சமூகத்தின் மத்தியிலிருந்து பயங்கரவாதத்தை முடிவுக்குக்கொண்டு வருவதற்குப் பின்பற்றப்படவேண்டிய சட்டத்தின் ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட செயன்முறைக்கு முற்றிலும் மாறுபட்டவையாகவே அமைந்துள்ளன.

இலங்கையின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் அடிப்படை மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டியது நீண்ட காலத்தேவைப்பாடாக இருக்கின்றது. அதன் இறுதி எல்லையை அடைவதற்கான பாதையை (செயற்திட்டத்தை) ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்சார் நிபுணர்கள் வகுத்தளித்துள்ளனர். ஆகவே, உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தில் மனித உரிமைகள் மற்றும் உரியவாறான செயன்முறைகள் சார்ந்த குறைந்தபட்சத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யுமாறு இலங்கை அரசை வலியுறுத்துகின்றோம்." - என்றுள்ளது.

## இந்திய மீனவர்களின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடற்றொழில் அமைச்சால் வெளியிடப்பட்ட அறிக்கையில், இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவது ஒரு பாரிய பிரச்சினை என்று கொழும்பில் உள்ள ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறினார் என்று மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி, இந்தப் பிரச்சினை புதுடில்லியின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும் என்று உறுதியளித்தார் என்றும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

உள்ளூர் பிரச்சினைகளுக்கு மேலதிகமாக இந்திய மீனவர்களின் அத்துமீறல் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைக் இலங்கைக்கடற்படையினர்கைதுசெய்தும் வருகின்றனர். இதனால் வடக்கு கடலில் பதற்றம் நிலவுகின்றது.

மன்னார், நெடுந்தீவு மற்றும் கச்சத்தீவுக்கு அருகாமையில் மூன்று வெவ்வேறு இடங்களில் 5 இழுவைப் படகுகளுடன் 27 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்த 48 மணி நேரத்துக்குள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தப் பிரச்சினையை ஐ.நா. தரப்புடன் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்று பாடசாலைகளைப் புறக்கணிக்க தமிழ்க் கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை

இன்று தாம் அறிவித்துள்ள பொது முடக்கத்தை முன்னிட்டு பாடசாலை நடவடிக்கைகள் அனைத்தையும் இன்று வெள்ளிக்கிழமை புறக்கணிக்குமாறு தமிழ் கட்சிகள் கூட்டாக அறிவித்துள் ளன.

இது தொடர்பில் தமிழ் கட்சிகள் அனுப்பி வைத்த செய்தி குறிப்பில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த செய்தி குறிப்பில்,நாளை நிக ழுவுள்ள பொது முடக்கம் முழுமையாக வெற்றியீட்டுவதை உறுதிப்படுத்து வது நம் எல்லோருடைய கடமை ஆகும்.

எனவே, வெள்ளிக்கிழமை நடை பெறவுள்ள பாடசாலைப் பரீட்சைகளை ஒத்திவைக்குமாறு, கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கு நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். யதார்த்த பூர்வமான முடிவு எடுக்கப்படும் என்றே எதிர்பார்க் கின்றோம்.

எது, எப்படி இருந்தாலும், பொது முடக்கத்தை முன்னிட்டு பாடசாலை நட வடிக்கைகள் அனைத்தையும் வெள்ளி யன்று புறக்கணிக்குமாறு எமது மாணவச் செல்வங்களை உரிமையோடு வேண்டிக் கொள்கின்றோம். பெற்றோர்களின் ஒத்து ழைப்பையும் நாடி நிற்கின்றோம்.

வெள்ளியன்று நிச்சயிக்கப்பட்டுள்ள பரீட்சையை, வேறு ஒரு தினத்தில் கல் வித் திணைக்களம் தாராளமாக நடாத்த முடியும். எமது ஒத்துழைப்பும் அதற்கு இருக்கும். – என்றுள்ளது.

# யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களும் பொதுமுடக்கத்திற்கு முழு ஆதரவு



முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா அவர்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் நடவடிக்கையை கண்டிக்கும் வகையில் தமிழ் அரசியல் கட்சிகளால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள பூரண கதவடைப்பு பொது முடக்கத்திற்கு யாழ்ப்பாணம் முஸ்லிம் வர்த்தகர்கள் உள்ளிட்ட முஸ்லிம் மக்களும் முழுமையான ஆத ரவைத் தெரிவித்துக் கொள்கின்ற னர்.

யாழ்ப்பாணம் முஸ்லிம் இளைஞர் கழகத்தின் தலைவர் என்.எம். அப்துல் லாஹ் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

நீதிபதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் நீதித்துறைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் நடவடிக்கை. ஜனநாயகத்தின் மிகப் பிர தான தூண்களில் ஒன்றான நீதித் துறை சுதந்திரத்தையும் து கேள்விக்குட் படுத்துகின்றது. இந் நடவடிக்கையினை நாம் வண்மையாக கண்டிக்கின் றோம்.

தமது சுயநல அரசியல் இலாபத்திற் காக வடக்கு – கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களை கூறுபோட நினைக்கும் சக்தி களால் இது போன்ற பல்வேறு நடவடிக் கைகள் கடந்த காலங்களில் இருந்து தொடர்ச்சியாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் ஒரு மித்த குரலில் ஒன்றிணைந்து இந்தக் கடையடைப்பு நடவடிக்கையில் ஒன்றுபடுவோம்.

நீதித்துறை சுதந்திரத்திற்கு நீதி கோருவதுடன், வடக்கு – கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் கட்ட விழ்த்துவிடப்படும் இது போன்ற சதித் திட்டங்களையும் மீறி, தமிழ்ப் பேசும் மக்கள் ஒன்றிணைந்து எதிர்கொண்டு முன்னோக்கிய பயணத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோமாக என்று இத் தருணத்தில் பகிரங்கமாக அழைப்பு விடுக்கின்றோம்.

நாம் "தமிழ்ப் பேசும் மக்களாக" தொடர்ந்தும் முன்னோக்கி பயணிப் போம் என்பதை பொது முடக்கத்தில் ஒன்றிணைவதன் ஊடாக உறுதிப்படுத்து வதுடன், பொது முடக்கத்தில் ஒன் றித்து நிற்கும் தமிழ் / முஸ்லிம் மக்களின் ஒருமித்த நிலைப்பாடு வடக்கு கிழக்கு வாழ் தமிழ் – முஸ்லிம் மக்களை ஒருபோதும் பிரித்து கூறுபோட முடியாது என்பதை பகிரங்கமாக அரசுக்கும், சர்வதேசத்திற் கும் வெளிப்படுத்தி நிற்கும் என்பதில் ஐயமில்லை. – என்று உள்ளது.

# போதையில் பஸ்ஸைச் செலுத்திய இ.போ.ச. சாரதிக்கு விளக்கமறியல்






(மன்னார் நிருபர்)

மன்னாரில் இலங்கைப் போக்குவரத் துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸை மது போதையில் ஓட்டி சென்ற சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் பஸ் நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை தலைமன்னார் நோக்கி பயணிகளுடன் சென்ற பஸ்ஸின் சாரதி குடிபோதை யில் வாகனத்தை செலுத்திய நிலை யில் மன்னார் போக்குவரத்து பொலி ஸாரால் மன்னார் வைத்தியசாலை வீதி யில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

அந்த சாரதி குடிபோதையில் வாக னத்தை செலுத்தியமை உறுதி செய்யப் பட்ட நிலையில் சாரதி நேற்று வியாழக்கி ழமை மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு ஆதரவு வழங்கத் தயார் என்கிறார் சீன நிதியமைச்சர்

இலங்கையின் கடன் மறுசீரமைப்பிற்காக இரு தரப்பினருக்கும் பொருத்தமான இடைக்கால மற்றும் நீண்ட கால வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சீனா முழுமையான ஆதரவை வழங்க தயாராகவுள்ளது என சீன நிதி அமைச்சர் லியு குன் உறுதியளித்துள்ளார்.

சீனாவிற்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சீன நிதி அமைச்சருக்கும் இடையிலான இருதரப்பு பேச்சு நேற்று பீஜிங்கில் இடம்பெற்ற போதே சீன நிதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார சவால் தொடர்பில் தமது நாடு உணர்ந்துள்ளது என்றும், இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு இதுவரை இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை வரவேற்கிறோம் எனவும் சீன நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கையின் அபிவிருத்திக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு சீனா தொடர்ந்து முழுமையான ஆதரவை வழங்கும் எனவும் சீன நிதி அமைச்சர் உறுதியளித்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான பணப்பரிமாற்றம் தொடர்பில் நீண்டகாலமாக கலந்துரையாடப்பட்டு வருகிறது எனவும் சீனாவுடன் நெருக்கமாக செயற்படும் ஏனைய சர்வதேச நிறுவனங்களும் இலங்கைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கிறோமென சீன நிதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.



பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான சவாலான பணியில் இலங்கைக்கு சீனா வழங்கும் தொடர்ச்சியான ஆதரவை மிகவும் பாராட்டுகிறோம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார மீட்சியை ஏற்படுத்துவதற்கும் இலங்கையில் போட்டித்தன்மை வாய்ந்த டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்குமான வேலைத்திட்டம் தொடர்பிலும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது

## மன்னார் பிரதான பாலம் ஊடாக நேற்று

# மீன்களை ஏற்றி வந்த வாகனம் விபத்து வீதியெங்கும் சிதறிக் கிடந்த மீன்கள்!

## பலத்த காயங்களுடன் சாரதி வைத்தியசாலையில் சேர்ப்பு





(மன்னார் நிருபர்)

மன்னார் தள்ளாடி பிரதான வீதியில் மீன் ஏற்றி வந்த மகேந்திரா ரக வாகனம் நேற்றைய தினம் மாலை வீதி அருகில் காணப்படும் வீதியோர தடையில் மோதி ஏற்பட்ட விபத்தில் சாரதி பலத்த காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சைக்காக மன்னார் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மன்னார் தள்ளாடி ஊடாக பேசாலைக்கு பல ஆயிரக்கணக்கான கிலோ மீன் மற்றும் திருக்கை மீனுடன் பயணித்த மகேந்திரா ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த வீதியோர தடையில் மோதி பள்ளத்தில் தூக்கி வீசப்பட்டுள்ளது.

வாகனத்தில் இருந்த பல ஆயிரக்கணக்கான கிலோ மீன்கள் வீதியில் தூக்கி வீசப்பட்ட நிலையில் பலத்த காயங்களுக்கு உள்ளான வாகன சாரதி மீட்கப்பட்டு வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மாதம்பையில் வர்த்தகரின் வீட்டில் ஒன்றரைக் கோடி ரூபா கொள்ளை

(ரஸீன் ரஸ்மின்)

மாதம்பை, தம்பகல்ல பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் சுமார் ஒன்றரை கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் மற்றும் தங்க நகைகள் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் வானில் வந்த நான்கு பேர் கொண்ட கும்பல் அந்த வீட்டின் உரிமையாளர்களை அறையொன்றில் அடைத்து வைத்து இந்த கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

தம்பகல்ல பிரதேசத்தில் உள அந்த வீட்டின் இரண்டு அறைகளில் இருந்து சுமார் 93 லட்சம் ரூபா பணம் மற்றும் 35 பவுண் தங்க நகைகள் என்பவற்றை கொள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என வீட்டின் உரிமையாளர் பொலிஸில் செய்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அந்த வீட்டின் உரிமையாளர் தேங்காய் விற்பனை செய்யும் வியாபாரி எனவும், அதேவேளை அவர் வேறு சில தொழிலிலும் ஈடுபட்டு வருகின்றவர் எனவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த கொள்ளைச் சம்பவத்தின் போது, அறை ஒன்றுக்குள் அடைக்கப்பட்டிருந்த அந்த வீட்டின் உரிமையாளர்கள் பின்னர் கதவுகளை உடைத்துக் கொண்டு வெளியே வந்தே மாதம்பை பொலிஸில் இதுபற்றி முறைப்பாடு செய்தார் எனவும் கூறப்படுகிறது.

# விஜயகலாவை வழக்கிலிருந்து விடுதலை செய்தது நீதிமன்றம்



– எஸ்.நிதர்ஷன் –

தமிழீழவிடுதலைப்புலிகள்அமைப்பை உருவாக்க வேண்டும் எனச் சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டார் எனக் கூறி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

2018ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் நடைபெற்ற ஜனாதிபதியின் மக்கள் சேவைத் திட்டத்தின் எட்டாவது நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் அச்சமின்றி சுதந்திரமாக வாழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் எழ வேண்டும் என சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டார் எனவும், அக்கருத்தானது அரசமைப்பின் 06ஆவது பிரிவின் திருத்தம், 1978ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் தண்டணைச் சட்டக்கோவை 120ஆம் ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றமாகும் எனவும் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பகுப்பாய்வு மற்றும் தடுப்புப் பிரிவு கொழும்பு பிரதான நீதிவான் நீதி நீதிமன்றில் முதல் அறிக்கை தாக்கல் செய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தனது சமர்ப்பணத்தில், விஜயகலா மகேஸ்வரன் ஜனாதிபதியின் மக்கள் சேவைத் திட்டத்தின் எட்டாவது நிகழ்ச்சியில் அரச அமைச்சர்கள் பலர் கலந்து கொண்ட நிகழ்வில் உரையாற்றுகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாகப் பெண்கள் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறைகள் குறித்து அவர் அச்சத்தையும் ஆத்திரத்தையும் உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டுப் பேசினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற துஷ்பிரயோகங்கள் இடம்பெறவில்லை. அப்படி நடைபெற்றால் அதற்கான தண்டனைகள் பாரதூரமாக இருந்தன. நாட்டின் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கபட வேண்டுமாயின் அத்தகைய நிர்வாகம் ஒன்றினை தற்போது நாம் ஏற்படுத்த வேண்டும் என்று கருத்தியதாகவே அவரது கருத்து அமைந்திருந்ததேயன்றி நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் உரையாற்றவில்லை என்ற சமர்ப்பணத்தையடுத்து 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8ஆம் திகதி விஜயகலா மகேஸ்வரனை ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்தது .

நேற்று (19) வழக்கு நீதிமன்றில் மேலதிக விசாரணைக்காக அழைக்கப்பட்ட போது குற்றப் புலனாய்வுப் பகுப்பாய்வு மற்றும் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நீதிமன்றில் தமது சமர்ப்பணத்தில் 1978ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டக்கோவை 120ஆம் பிரிவின் கீழோ விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராகக் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்ய உத்தேசிக்கவில்லையென சட்டமா அதிபர் திணைக்களம் தங்களுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது என்று பொலிஸார் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்தனர்.

இதையடுத்து விஜயகலா மகேஸ்வரன் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா, விஜயகலா மகேஸ்வரனை விடுதலை செய்யுமாறு நீதிமன்றைக் கேட்டுக் கொண்டதையடுத்து அவர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

சட்டத்தரணி தர்மஜா தர்மராஜாவின் அனுசரணையில் சிரேஷ்ட சட்டத்தரணி காமினி திஸாநாயக்க, ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா ஆகியோர் இந்த வழக்கில் ஆஜராகினர்.

# கந்தர்மடத்தில் பொலிஸ் என்று கூறி கொள்ளையடித்த இருவர் சிக்கினர்!

## மற்றைய இருவரைத் தேடி வேட்டை

யாழ்ப்பாணம், கந்தர்மடம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் பொலிஸார் என்று தங்களை அறிமுகப்படுத்தி பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம்புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் 23 ஆயிரம் ரூபாய் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

கடைக்குள் நுழைந்த சிலர் தங்களைப் பொலிஸார் என்று அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

அந்தக் கடையில் போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்படுகின்றன என்று தகவல் கிடைத்துள்ளது என்றும் தேடுதல் நடத்த வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

கடைக்குள் நுழைந்தவர்கள் அங்கு தேடுதல் நடத்தியுள்ளனர். கடையில் இருந்த 23 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்துக் கொண்டு, கடையிலிருந்தவர்களை மிரட்டிவிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ்



நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் நேற்று இருவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## இந்தியாவின் பிரதிபலிப்பு என்ன?

நீண்ட காலச் சிக்கலாகத் தொடரும் இந்திய மீனவரின் அத்துமீறல் விவகாரம் புதிய வடிவம் எடுக்கும் சூழல் ஏற்பட்டிருப்பதாகத் தோன்றுகின்றது.

குறுகிய பாக் ஜல சந்தியினால் பிரிக்கப்பட்டிருக்கும் இலங்கை - இந்திய நாடுகளுக்கு இடையிலான இந்தப் பிரச்சினைக்கு சமூகத் தீர்வு காணும் முயற்சியில் - சமரச எத்தனங்களில் - இருதரப்புகளும் ஈடுபட்டிருக்கின்றன என்று அவ்வப்போது அறிவிப்புகளும், அறிக்கைகளும் வெளியிடப்பட்டு வந்தாலும்

கூட, சுமுகத் தீர்வு எட்டும் நடவடிக்கைகள் எப்போதுமே சாண் ஏற முழம் சறுக்கும் விவகாரமாகவே இருந்து வந்திருக்கின்றமை கண்கூடு.

கொழும்பில், புதுடில்லியில், சென்னையில் என்று பல சுற்றுக்கள் - பல கட்டங்கள் - எனப் பேச்சுக்கள் இடம்பெற்ற போதிலும், இப்பிரச்சினை தீர்வதற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

'மூக்கு இருக்கும் வரை சளி இருக்கும்' என்பது போல இந்தப் பிரச்சினை இரு நாடுகளுக்கும் இடையில் நிரந்தரமாக நீடிப்பது தவிர்க்க முடியாதது என்று அவதானிகள் கருதும் அளவுக்கு நிலைமை இருப்பது தெளிவானது.

தமிழக மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவதும், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட, அவர்கள் குறிப்பிட்ட காலம் இலங்கைச் சிறையில் வாடிய பின்னர் நிபந்தனையுடன் விடுதலையாகின்றமையும் தொடர்கதையாக நீடிக்கின்றன.

இந்தப் பிரச்சினையால் தென்னிந்திய கரையோரப் பிரதேசங்கள் எப்போதும் பதற்றமாகவே இருந்து வருகின்றமை தெரிந்த விடயம்தான்.

இப்படி இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுபடும் சூழலில், இவ்விவகாரத்தில் ஐ.நாவின் தலையீட்டை நாடி இருக்கின்றார் இலங்கைக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்ற தகவல் வெளியாகி உள்ளது.

இலங்கை கடற்றொழில் அமைச்சரின் இந்த நகர்வு புதுடில்லியை நிச்சயம் சீற்றத்தில் ஆழ்த்தி இருக்கும். அதுவும் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும் சமயத்தில் மூன்றாம் தரப்பாக, சமரசத்துக்கு ஐ.நாவை விவகாரத்துக்குள் கொண்டு வந்து செருகுவதற்கு எடுக்கப்படும் முயற்சி புதுடில்லியில் கடும் சீற்றத்தை ஏற்படுத்தி இருக்கும். அது சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட விடயம்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மிகப்பெரும் மோதலாக - சர்ச்சையாக - கடந்த பல தசாப்தங்களாக நீடித்து வரும் காஷ்மீர் விவகாரத்தில் கூட ஐ.நா. உட்பட மூன்றாம் தரப்பின் சமரசத்துக்கோ, தலையீட்டுக்கோ இடமேயில்லை என்று மிக மிக உறுதியாக நின்று வரும் புதுடில்லி, தனது தென்முனையில் இலங்கைத் தரப்புடனான மீனவர் பிரச்சினைக்கு ஐ.நா. தலையீட்டை கோரும் விடயத்தை மிகப்பெரிய சவாலாக அல்லது தலையிடியாக நோக்கும் என்பது திண்ணம்.

தமிழ் அமைச்சரான டக்ளஸ் தேவனந்தா, இந்திய - இலங்கை மீனவர் பிரச்சனைக்குத் தீர்வு காண மூன்றாம் தரப்பாக ஐ.நாவின் பங்களிப்பைக் கோருகின்றமையை அற்ப விடயமாக இந்தியா பார்க்காது. அதன் பிரதிபலிப்பு நிச்சயம் காட்டமாகவே இருக்கும்.

# அடுத்த ஆண்டு ஜுன் மாதம் வரை எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாதாம்

## வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

அடுத்த ஆண்டு ஜுன் மாதம் வரை அவசியமான எரிபொருளுக்கான டெண்டர் செயற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்து விட்டதால் அதுவரை எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்றும், நுகர்வோருக்குத் தேவையான எரிபொருளை எவ்வித சிக்கலும் இன்றி வழங்க முடியும் என்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ சானக தெரிவித்தார்.

இந்நாட்டில் எரிபொருளை விநியோகிக்கும் வாய்ப்பை சீனாவின் சினோபெக் நிறுவனத்திற்கு வழங்கியதன் மூலம் வருடத்திற்கு சுமார் 50 கோடி டொலர்களுக்கு அதிகமான அந்நியச் செலாவணியை நாட்டில் சேமிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் டி.வீ சானக இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் டி.வீ சானக,

"கடந்த காலங்களில் எமது நாடு பாரிய எரிபொருள் நெருக்கடியை எதிர்கொண்டிருந்தது. எரிபொருள் வரிசைகள் ஏற்பட்டன. அதேபோன்று விமானங்களுக்கு அவசியமான எரிபொருளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. அதனால் நாடு பாரிய சிக்கலுக்கு உள்ளானது. ஆனால் மிகவும் குறுகிய காலத்திலேயே அந்த நிலையில் இருந்து முழுமையாக மீண்டுவர எம்மால் முடிந்தது.

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் என்பது, உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை ஒப்பீட்டளவில் குறைவாக இருந்த மாதமாகும். அன்று ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 50 அமெரிக்க டொலர்களாக இருந்தது. ஆனால், தொடர்ந்து வந்த நான்கு, ஐந்து மாதங்களுக்குள் அது 65 அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. அதன் பின்னர் ரஷ்யா – உக்ரைன் யுத்தம் காரணமாக ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை சுமார் 100 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்தது.

அதன் பின்னர் கடந்த காலங்களில் ஏற்பட்ட சர்வதேச நிலைமைகள் காரணமாக அது 80 அமெரிக்க டொலர்கள் வரை குறைவடைந்தது. எனவே 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் குறைவாக இருந்து, படிப்படியாக அதிகரித்து வந்த மசகு எண்ணெய் விலை, இந்த வருடம், ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர் ஓரளவு குறைந்துள்ளது. குறிப்பாக இந்த மாதத்தின் முதலாம் திகதியில் இருந்து ஆறாம் திகதி வரை உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை சுமார் 4 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

ஆனால் அண்மையில் காசா பகுதியில் ஏற்பட்ட மோதல் காரணமாக உலக சந்தையில் அனைத்து எரிபொருள் வகையினதும் விலை, கிட்டத்தட்ட 4 சதவீதத்தால் மீண்டும் அதிகரித்துள்ளது. நீண்ட காலத்திற்குப் பிறகு எமக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பம் சில நாட்களுக்குள்ளேயே கைநழுவி விடும் நிலை தோன்றியுள்ளது. இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் ஆகிய நாடுகள் எரிபொருள் உற்பத்தி அல்லது உலக சந்தைக்கு எரிபொருள் விநியோகிக்கும் நாடுகள் இல்லாவிட்டாலும் கூட ஈரானிலும் இந்த மோதல் சூழ்நிலையின் பதற்றம் காணப்படுவதனாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, எதிர்கால உலக சந்தை நிலவரங்கள் தொடர்பான பகுப்பாய்வுகளை மேற்கொள்வது மிகவும் கடினமாகவே உள்ளது.

அடுத்த வருடம் ஜுன் மாதம் வரை அவசியமான எரிபொருளுக்கான டெண்டர் செயற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன. இலங்கை வரலாற்றில் முதன் முதலாக எமக்கு அவசியமான எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக 20 கோடி டொலர்கள் கையிருப்பை நாம் பேணி வருகின்றோம். இதன் காரணமாக விநியோகஸ்தர்களின் நம்பிக்கையை பெற்றுள்ளதுடன், அதன் மூலம் நுகர்வோருக்குத் தேவையான எரிபொருளை எவ்வித சிக்கலும் இன்றி விநியோகிக்க முடியும்.

மேலும், எரிபொருள் கொள்வனவுக்காக கடந்த காலங்களில் பெற்றிருந்த கடன்களை மீளச்செலுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், எரிபொருள் சுத்திகரிப்புப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கத் தேவையான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம். – என்றார்.

# மனிதாபிமான உதவிகளை இந்தியா தொடரும்: பாலஸ்தீன ஜனாதிபதியிடம் பிரதமர் மோடி உறுதி



காசாவில் உள்ள அல் அஹ்லி மருத்துவமனை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தோருக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸிடம் தொலைபேசியில் பேசிய போதே பிரதமர் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் மோடி தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸிடம் பேசினேன். காசாவில் உள்ள அல் அஹ்லி மருத்துவமனையில் பொதுமக்களின் உயிரிழப்புகளுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தேன்.

இந்த உரையாடலின்போது, பாலஸ்தீன பகுதிகளில் வன்முறையினால் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்து வருவதையும், பயங்கரவாம் குறித்த கவலைகளை பகிர்ந்துகொண்டோம்.

மேலும் இஸ்ரேல் – பாலஸ்தீன விவகாரத்தில் இந்தியாவின் நீண்டகால கொள்கை நிலைப்பாடும் மஹ்மூத் அப்பாஸிடம் தெரிவிக்கப்பட்டது. பாலஸ்தீன மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை இந்தியா தொடர்ந்து அனுப்பும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, காசா மருத்துவமனை தாக்குதல் குறித்து பிரதமர் மோடி தனது சமூக வலைத்தள பக்கத்தில் நேற்று முன்தினம் வெளியிட்ட பதிவில்,

காசாவில் உள்ள அல் அஹ்லி மருத்துவமனை மீது நடத்தப்பட்ட தாக்குதல், அதில் ஏராளமானோர் உயிரிழந்ததை அறிந்து நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன்.

இந்த துயரத்தால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் குணமடைய பிரார்த்திக்கிறேன். இஸ்ரேல், ஹமாஸ் தீவிரவாதிகள் இடையே நடந்து கொண்டிருக்கும் இந்த மோதலில் தொடர்ச்சியாக பொதுமக்கள் உயிரிழப்பது மிகவும் கவலைக்குரிய விஷயமாக உள்ளது. மருத்துவமனை மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்கு சம்பந்தப்பட்டவர்களே அதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

கடந்த செவ்வாய் கிழமை இரவு காசா பகுதியில் உள்ள அல் அஹ்லி மருத்துவமனை மீது ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டன. இதில், மருத்துவமனையில் இருந்த சுமார் 500 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர் என சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் இராணுவத்தின் ரொக்கெட் குண்டு தாக்குதல்தான் இதற்கு காரணம் என ஹமாஸ் அமைப்பினர் குற்றம்சாட்டினர். ஆனால், இத்தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் நடத்தவில்லை என அந்த நாட்டு பிரதமர் நெதன்யாகு உறுதியாக தெரிவித்திருந்தார்.

# காசா மோதலின்போது மனிதாபிமான சட்டத்தை கடைபிடிக்க வேண்டுமென இந்தியா வலியுறுத்தல்




இஸ்ரேல் – ஹமாஸ் இடையேயான மோதலில், மனிதாபிமான சட்டம் கடுமையாக கடைபிடிக்கப்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

டில்லியில் நேற்று ஊடகவியலாளர்களை சந்தித்த வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பக்சியிடம், காசா மருத்துவமனை மீதான தாக்குதல் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதில் அளித்த அரிந்தம் பக்சி, ஹமாஸ் – இஸ்ரேல் மோதலில் அப்பாவி மக்கள் உயிரிழப்பதும், காயமடைவதும் கவலை அளிக்கிறது. சர்வதேச மனிதாபிமான சட்டங்களை கடுமையாக கடைபிடிக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்துகிறது.

இஸ்ரேல் மீதான கொடூரமான தாக்குதலை நாங்கள் கடுமையாக கண்டித்துள்ளோம். பயங்கரவாதத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் எதிர்த்துப் போராடுவதில் சர்வதேச சமூகம் ஒன்றாக நிற்க வேண்டும். பாலஸ்தீன விவகாரத்தில், இரு நாடுகளின் தீர்வுக்கான நேரடி பேச்சுவார்த்தைக்கு ஆதரவாக இந்தியா தனது நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது என்று தெரிவித்துள்ளார்.

# மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் காலமானார்!

செங்கல்பட்டு மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி பீட நிறுவனர் பங்காரு அடிகளார் நேற்று மாலை காலமானார். அவருக்கு வயது 82.

உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிறிது காலமாக அவர் சிகிச்சை பெற்று வந்தார். இதனிடையே மாரடைப்பு காரணமாக நேற்று மாலை 5 மணியளவில் உயிரிழந்தார். ஆதிபராசக்தி தொண்டு நிறுவன மருத்துவக் கல்வி மற்றும் கலாசார அறக்கட்டளையின் தலைவராக பங்காரு அடிகளார் இருந்தார்.

இந்த நிலையில், மறைந்த பங்காரு அடிகளாரின் இறுதி நிகழ்வு அரசு மரியாதையுடன் நடைபெறும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



# இஸ்ரேலுக்கு பிரித்தானியா முழு ஆதரவு: நெதன்யாகுவிடம் ரிஷி சுனக் தெரிவிப்பு



ஹமாஸுக்கு எதிரான மோதலில் இஸ்ரேல் வெற்றி பெற பிரித்தானியா விரும்புகிறது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் இஸ்ரேலுக்கு நேற்று பயணம் மேற்கொண்டார். அந்த நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சந்தித்த அவர், பிரித்தானியாவின் முழுமையான ஆதரவு இஸ்ரேலுக்கு இருப்பதை நேரில் தெரிவித்தார்.

இதையடுத்து, இருவரும் ஊடகவியலாளர்களை சந்தித்தனர். இதன்போது கருத்து தெரிவித்த ரிஷி சுனக், இது போன்ற மோசமான சூழ்நிலையில் நான் இங்கு இருப்பதற்கு வருந்துகிறேன். கடந்த இரண்டு வாரங்களில் எந்த நாடும், எந்த மக்களும் சகித்துக்கொள்ளக் கூடாத கொடூர தாக்குதலை இந்த நாடு சந்தித்துள்ளது.

தீவிரவாத தாக்குதலால் உயிரிழந்த மக்களின் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பிரித்தானிய மக்களின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இஸ்ரேலின் உரிமையை நாங்கள் முழுமையாக ஆதரிக்கிறோம். சர்வதேச சட்டத்துக்கு உட்பட்டு தன்னை தற்காத்துக் கொள்ள, ஹமாஸ் அமைப்பை நிர்மூலமாக்க இஸ்ரேலுக்கு எங்கள் ஆதரவு உண்டு. பாலஸ்தீன மக்களும் ஹமாஸால்

பாதிக்கப்பட்டவர்கள் என்பதை நாங்கள் அங்கீகரிக்கிறோம். மனிதாபிமான உதவிக்காக காசாவுக்கான பாதைகள் திறக்கப்படுவதை உறுதி செய்ய நீங்கள் எடுத்த நேற்றைய முடிவை நான் வரவேற்கிறேன்.

நீங்கள் அந்த முடிவை எடுத்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் வெற்றி பெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# பிஞ்சு குழந்தைகளை கொன்றது யார்? காஸாவில் கதறி அழுதார் வைத்தியர்



காஸா ஐரோப்பிய வைத்தியசாலையின் வைத்தியர் யூசுப் அல் அகாத் என்பவர் கதறி அழும் காணொளி சமூக வலைத் தளங்களில் பரவிவருகிறது.

அந்த காணொளியில், மருத்துவர் முன்னிருக்கும் படுக்கையில் ஆறு குழந்தைகளின் சடலங்கள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழந்தைகளைப் பாருங்கள். யார் இவர்களைக் கொன்றது? சுதந்திர உலகமே, ஒடுக்கப்பட்டு துயருற்று இருக்கும் இந்த மக்களின் மீது படுகொலை நடத்தப்பட்ட போது எங்கு சென்றாய்? என வைத்தியர் யூசுப் அல் அகாத் உருக்கமாகப் பேசி கதறி அழும் காணொளி காண்போரைக் கண் கலங்க வைக்கின்றது.

# போரை நிறுத்த கோரி அமெரிக்காவில் போராடிய 300 பேர் கைது!

இஸ்ரேலுக்கும் – ஹமாஸுக்கும் இடையே இடம்பெற்றுவரும் போரை நிறுத்துமாறு அமெரிக்காவில் போராடிய 300 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வொஷிங்டனில் பாலஸ்தீனிய ஆதரவாளர்கள் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது கேனான் ரோட்குண்டா பகுதியை முற்றுகையிட்ட போராட்டக்காரர்கள் போரை நிறுத்தும்படி கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக அமெரிக்க நாடாளுமன்ற வளாகத்தை நோக்கிச் சென்றனர்.

போராட்டக்காரர்களை தடுத்து நிறுத்திய பொலிஸார் அவர்களை கலைந்து போகவேண்டும் என அறிவுறுத்தினர்.

எனினும் போராட்டக்காரர்கள் கலைந்து செல்லாததால் அவர்களை பொலிஸார் கைது செய்தனர். அந்தவகையில் சுமார் 300 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# தளபதி அதிரடி
# இந்தியா அபாரம்




உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், இந்திய அணி பங்களாதேஷை இலகுவாக வீழ்த்தியது. நேற்றையதினம் தளபதி விஜயின் 'லியோ' திரைப்படம் வெளியாகி கோடிகளை வசூல் செய்ய, அதேநேரத்தில், இந்திய கிரிக்கெட் அணியின் தளபதி என ரசிகர்களால் செல்லமாக அழைக்கப்படும் விராட் கோஹ்லி அபாராமாக ஆடி சதமடித்தார்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று புனேயில் நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி அந்த அணியின் தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய டான்சித் ஹசன் மற்றும் லிட்டன் தாஸ் இருவரும் அணிக்கு சிறப்பான தொடக்கத்தைக் கொடுத்தனர்.

இருவரும் அரைச்சதம் அடித்து, முதல் விக்கெட்டுக்காக 93 ஓட்டங்களைச் சேர்த்தனர். டான்சித் ஹசன் 51 ஓட்டங்களுடனும், லிட்டன் தாஸ் 66 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த அணித்தலைவர் நஜ்முல் ஹசன் சாண்டோ (8), மெஹதி ஹசன் (3), தவ்ஹித் ஹரிதாய் (16) ஆகியோர் விரைவாக ஆட்டமிழந்தனர்.

கடைசிக் கட்டத்தில் முஷ்பிகுர் ரஹிம் (38) மற்றும் மகமதுல்லா (36) ஆகியோரின் பங்களிப்புடன் பங்களாதேஷ் அணி, 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 256 ஓட்டங்களைச் சேர்த்தது.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில், சிராஜ், ஜடேஜா, பும்ரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பின்னர் 257 ஓட்டங்கள் என்ற வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணிக்கு, ரோஹித் சர்மா மற்றும் சுப்மன் கில் இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்காக 88 ஓட்டங்களைக் குவித்தது. அதிரடியாக விளையாடியபோதும் ரோஹித் சர்மா (48) அரைச்சதத்தைத் தவறவிட்டார். சுப்மன் கில் அரைச்சதம் அடித்து (53) ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஸ்ரேயஸ் ஐயர் 19 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார். விராட் கோஹ்லி தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மறுபுறம் அவருக்கு கே.எல்.ராகுல் பக்கபலமாக இருந்தார்.

ஆட்டத்தின் கடைசிக் கட்டத்தில் கோஹ்லி சதம் அடிப்பதற்காக பந்துகளை பௌண்டரிக்கு விரட்டினார். ஒரு கட்டத்தில், சதம் அடிப்பதற்காக ஒரு ஓட்டம் சேர்ப்பதற்கான வாய்ப்புகள் இருந்தும், அதனைத் தவிர்த்தார்.

கடைசியில் சிக்ஸர் அடித்து தனது சதத்தைப் பூர்த்தி செய்த அவர், ஆட்டத்தை வெற்றிகரமாக முடித்துவைத்தார்.

முடிவில் இந்திய அணி 41.3 ஓவர்களில் வெற்றி இலக்கைக் கடந்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

விராட் கோஹ்லி 103 ஓட்டங்களுடனும், கே.எல்.ராகுல் 34 ஓட்டங்களுடனும் கடைசி வரை களத்தில் இருந்தனர்.

பங்களாதேஷ் அணி சார்பாக மெஹதி ஹசன் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக இந்தியாவின் விராட் கோஹ்லி தெரிவானார்.

இந்த வெற்றியுடன் இந்திய அணி தொடர்ச்சியாக 4 வெற்றிகளைப் பதிவு செய்து புள்ளிப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ | பு | ஓ.ச |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | நியூஸிலாந்து | 4 | 4 | 0 | 0 | 0 | 8 | 1.923 |
| 02 | இந்தியா | 4 | 4 | 0 | 0 | 0 | 8 | 1.659 |
| 03 | தென்னாபிரிக்கா | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | 1.385 |
| 04 | பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | 0.137 |
| 05 | இங்கிலாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.084 |
| 06 | அவுஸ்திரேலியா | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.734 |
| 07 | பங்களாதேஷ் | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -0.784 |
| 08 | நெதர்லாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.993 |
| 09 | ஆப்கானிஸ்தான் | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -1.250 |
| 10 | இலங்கை | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -1.532 |

குறிப்பு: போ-போட்டி, வெ-வெற்றி, தோ-தோல்வி, மு.அ.-முடிவு அற்றது, பு-புள்ளி, ஓ.ச.-ஓட்ட சராசரி



# தேசிய இளைஞர்கள் கூடைப்பந்தாட்டம்: சம்பியனானது யாழ். பெண்கள் அணி!

## ஆண்கள் பிரிவு மூன்றாமிடம்

தேசிய இளைஞர்கள் கூடைப்பந்தாட்டத்தில் ஏழாவது தடவையாக யாழ். மாவட்ட பெண்கள் அணி சம்பியனாகியுள்ளது. ஆண்கள் அணிக்கு மூன்றாமிடம் கிடைத்தது.

34வது தேசிய இளைஞர்கள் விளையாட்டுப் போட்டிகளின், கூடைப்பந்தாட்ட போட்டிகள் கடந்த 14 மற்றும் 15ஆம் திகதிகளில் நுகேகொட புனித சென்சேவியர் ஆண்கள் மற்றும் பெண்கள் பாடசாலை மைதானங்களில் நடைபெற்றன .

இதில் யாழ். மாவட்டம் சார்பாக ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகள் கலந்து கொண்டன.

இதில் பெண்கள் அணி தொடர்ச்சியாக கடந்த ஆறு வருடங்கள் சம்பியன் பட்டத்தை வென்றிருந்தது. இம்முறை ஏழாவது தடவையாகவும் சம்பியன் பட்டம் வெல்வதற்காகக் களமாடியது .

அதன்படி யாழ். மாவட்ட பெண்கள் அணி, முதல் போட்டியில் புத்தளம் மாவட்ட அணியை இலகுவாக வீழ்த்தியது. பின்னர் காலிறுதியில் காலியை காலி பண்ணியது.

அரையிறுதிப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியை வென்றது.

பின்னர், இறுதிப்போட்டில் தேசிய வீராங்கனைகளை உள்ளடக்கிய கம்பஹா மாவட்ட அணியை எதிர்கொண்டது.

அந்தப் போட்டியில் 36 : 26 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று, ஏழாவது தடவையாகவும் யாழ். மாவட்ட அணி சம்பியனாகி தங்கப் பதக்கத்தை வென்றது.

அதேவேளை, யாழ். மாவட்ட ஆண்கள் அணி கடந்த ஆண்டு சம்பியனாகி தங்கப் பதக்கத்தை வெற்றிபெற்றிருந்தது.

இந்நிலையில், இவ்வாண்டுக்கான போட்டிகளில் முதலாவது போட்டியில் குருநாகல் அணியை வெற்றி கொண்டு காலிறுதிப்போட்டியில் களுத்துறை அணியை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது.

பின்னர் அரையிறுதிப் போட்டியில் தேசிய வீரர்களை உள்ளடக்கிய கொழும்பு தேசிய அணியிடம் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் மட்டக்களப்பு அணியுடனான போட்டியில் 46 : 40 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று வெண்கலப்பதக்கத்தைத் தமதாக்கிக்கொண்டது.





# பாறைகளுடன் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் வெல்லவாயவில் போக்குவரத்துப் பாதிப்பு

எல்ல – வெல்லவாய பிரதான வீதியின் ராவண எல்ல பகுதியில் பாரிய மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் போக்குவரத்திற்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ராவண எல்ல பகுதியில் நேற்று அதிகாலை கற்பாறைகளுடன் பாரிய மண்மேடொன்று சரிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் சுமார் 2 மணித்தியாலங்களுக்கு அந்த மார்க்கத்தினூடான போக்குவரத்து சிறிய ரக வாகனங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து, வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் அந்தப் பகுதியில் சரிந்து கிடந்த மண்மேட்டை அகற்றும் நடவடிக்கைகளை முனனெடுத்தனர்.

தற்காலிகமாக மண்மேடு அகற்றப்பட்டு தற்பொழுது ஒருவழிப் பாதையாக அந்த வீதியைப் பயன்படுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே, அந்தப் பகுதியில் நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக, கற்பாறைகள் சரிந்து விழும் அபாயம் காணப்படுவதால் சாரதிகள் வாகனங்களை அவதானத்துடன் செலுத்த வேண்டும் என எல்ல பொலிஸார் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதனிடையே, கண்டி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பெய்து வரும் மழையால் பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் 3 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனால், விக்டோரியா நீர்த்தேக்கத்தில் விநாடிக்கு 3,750 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

அணையின் கீழ்ப்பகுதியில் வசிக்கும் மக்கள் மகாவலி ஆற்றைப் பயன்படுத்தும் போது அவதானத்துடன் செயற்படுமாறு பொல்கொல்ல மகாவலி அணையின் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை, தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் 2 வான்கதவுகள் 2 அடிகளுக்கு திறக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் விநாடிக்கு 2,800 கன அடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.



# மாணவர்களிடையே கண் நோய் பரவும் அபாயம் அதிகரிப்பு!



## நோயுற்ற குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்பாதீர்!!

பாடசாலை மாணவர்களிடையே கண் நோய்கள் வேகமாகப் பரவும் அபாயம் அதிகரித்துள்ளது என குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா கூறியுள்ளார்.

நோய்வாய்ப்பட்ட குழந்தைகளை முன்பள்ளி மற்றும் பாடசாலைகளுக்கு அனுப்பாமல் இருப்பதன் மூலம் இந்த நிலைமையை கட்டுப்படுத்த முடியும் என அவர் பெற்றோரை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போதைய நாள்களில் பாடசாலை மாணவர்களிடையே கண் நோய் பரவி வருகிறது. கண்கள் சிவத்தல், பார்வை மங்கல், கண்ணீர், காய்ச்சல், தலைவலி போன்ற அறிகுறிகளை நாம் காண்கிறோம். இது மிக விரைவாக பரவும் என்பதால் இதை வைரஸ் காய்ச்சலாகப் பார்க்கிறோம்.

குழந்தைகள் ஒன்றாக விளையாடுவதால், அவர்களுக்கு இடையே தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இந்த அறிகுறிகளுடன், சில நேரங்களில் மேல் சுவாசக் குழாயில் அது இருமல், சளி, காய்ச்சல் போன்ற அறிகுறிகளும் வரலாம்.

அப்படி ஒரு நிலை இருந்தால், குழந்தையை பாடசாலைக்கு அனுப்பாதீர்கள். குழந்தைகளை பகல்நேர பராமரிப்பு மையங்களுக்கோ, முன்பள்ளிக்கோ அனுப்பாதீர்கள். மற்ற குழந்தைகளுக்கு தொற்று ஏற்படலாம். – என்று குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கில் மீன்பிடித் தொழிலுக்கு பிரத்தியேகமான முதலீட்டு வலயம்

## கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தகவல்



வட மாகாண மீன்பிடித் தொழிலுக்கென பிரத்தியேகமான முதலீட்டு வலயமொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும், அதன்மூலம் மீன்பிடித் தொழில் தொடர்பான முதலீடுகளை கொண்டுவர முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனூடாக அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த இதனைக் குறிப்பிட்டார்.

மீன்பிடித் தொழிலுக்கு மட்டுமன்றி நுகர்வோருக்கும் பாரிய நட்டத்தை ஏற்படுத்தும் வகையில் இடைத்தரகர்கள் குழுவொன்று முறையற்ற வகையில் இலாபம் ஈட்டும் மீன்பிடி மாஃபியாவை முடிவுக்கு கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன எனவும் இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

அத்துடன் இவ்வருட உலக மீனவர் தினத்துடன் இணைந்ததாக நவம்பர் 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை வட மாகாணத்தை கேந்திரமாகக் கொண்டு யாழ்.மாவட்டத்தை மையப்படுத்தி வடக்கில் பல நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

நடமாடும் சேவை, மீன்பிடி அடையாள அட்டை வழங்கல், மீன்பிடிப் படகுகளை பதிவு செய்தல், மீன்பிடி சமிக்ஞைகளின் தொடர்பாடல் பிரச்சினைகளை தீர்த்தல் உள்ளிட்ட கடற்றொழில் அமைச்சுடன் தொடர்புள்ள அனைத்து நிறுவனங்களினாலும் வழங்கப்படும் அனைத்து சேவைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு தீர்வுகள் வழங்கப்படும் என அவர் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் நாரா நிறுவனத்தின் பரிசோதனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், இரணைமடு நீர்த்தேக்கம் உள்ளிட்ட ஆறுகள் மற்றும் ஏரிகளில் மீன் குஞ்சுகள் விடப்படுமென இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும், நன்னீர் மீன்பிடித் தொழிலை ஊக்குவிப்பதற்காக சுமார் 54 மில்லியன் மீன் குஞ்சுகள் நாடு முழுவதும் உள்ள நன்னீர் தேக்கங்களில் விடப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

சீன அரசின் உதவியுடன் ஒருநாள் மீன்பிடிப் படகுகளுக்கு மண்ணெண்ணெய் மானியம் வழங்கும் திட்டம் இரண்டாவது முறையாக செயற்படுத்தப்படுவதாகவும் ஒரு மீனவருக்கு 153 லீட்டர் மண்ணெண்ணெய் வீதம் 28 ஆயிரம் மீனவர்களுக்கு 42 இலட்சத்து 50 ஆயிரம் லீட்டர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும் எனவும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

# மதுவரித்திணைக்களம் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 28,441 பேர் கைது



இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மதுவரித் திணைக்களத்தினால் 28 ஆயிரத்து 441 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த சுற்றிவளைப்புகளின் போது 28 ஆயிரத்து 441 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், கைதுசெய்யப்பட்டவர்களில், மூவாயிரத்து 756 பெண்களும் அடங்குகின்றனர் என மதுவரித்திணைக்களம் தெரிவித்துள்ளது.



# வவுனியாவில் நிமலராஜனின் நினைவுதினம் அனுஷ்டிப்பு

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 23ஆவது ஆண்டு நினைவுதினம் வவுனியா ஊடக அமையத்தில் நேற்று (19) மாலை அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா ஊடக அமையத்தின் தலைவர் ப.கார்த்தீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முதலாவது ஈகைச் சுடரை சிரேஷ்ட ஊடகவியலாளர் கி.வசந்தரூபன் ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து நிமலராஜனின் உருவப்படத்துக்கு ஏனைய ஊடகவியலாளர்கள் நினைவுச்சுடரை ஏற்றிவைத்து, மலரஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து நினைவுப் பேருரையை ஊடகவியலாளர் இ.சற்சொரூபன் நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில்,

“இலங்கையில் தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக அடக்கு முறைக்கு உள்ளாகும் நிலைமை நீடித்து வருகின்றது. அத்துடன், நிமலராஜன் உட்பட படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதி, பல வருடங்களாக மறுக்கப்பட்டு வருகின்றது. ஊடகவியலாளர்கள் கொலைகள் தொடர்பாக எவ்வித உள்நாட்டு விசாரணையோ, சர்வதேச விசாரணையோ இடம்பெறாமல் இருக்கின்றமையையிட்டு நாம் கவலையடைகின்றோம்.

இந்நிலையில், ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதுடன், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதில் உரிய தரப்புக்கள் கரிசனையுடன் செயற்படவேண்டும்” என்றார்.





# மட்டக்களப்பில் ஊடகவியலாளர் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு

**- பழுவூரான், க.சரவணன் -**

படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர் மற்றும் மயில்வாகனம் நிமலராஜனின் 23ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்றது.

மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் சங்கம், ஊடக அமையம் ஆகியவற்றின் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில், மட்டக்களப்ப காந்தி பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நினைவுத் தூபியில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதில் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டு படுகொலை செய்யப்பட்ட அனைத்து ஊடகவியலாளர்கள் மற்றும் இஸ்ரேல் காஸா யுத்தத்தின் போது உயிரிழந்த ஊடகவியலாளர்களின் ஆத்மாசாந்தி வேண்டி சுடர் ஏற்றி மலர் தூபிஅஞ்சலி செலுத்தினர்.














# படுகொலை செய்யப்பட்ட ஊடகரின் நினைவேந்தல் முல்லைத்தீவிலும் நேற்று அனுஷ்டிப்பு

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 23ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று (19) இடம்பெற்றது.

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவர் சண்முகம் தவசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்நினைவேந்தலில், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.















# சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் இலங்கைக்கு விஜயம்




சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் மரியா பெர்னாண்டா கார்ஸா ஐந்து நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் 45 மில்லியன் வர்த்தக நிறுவனங்களின் நிறுவன உறுப்புரிமையை கொண்ட 170 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வதேச வர்த்தக சம்மேளனமானது, உலகின் பாரிய மற்றும் மிகவும் பலம் வாய்ந்த வர்த்தக அமைப்பாகக் கருதப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச வர்த்தக அமைப்பு மற்றும் உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பு என்பனவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே வர்த்தக அமைப்பாக சர்வதேச வர்த்தக சம்மேளனம் காணப்படுகின்றது.

நாட்டை வந்தடைந்துள்ள மரியா பெர்னாண்டா கார்ஸாவை இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் ஷனில் அன்டனி பெர்னாண்டோ உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர்.

சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் தலைவரொருவர் இலங்கைக்கு வருகை தரும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.10.2023


மேஷம்

இன்று அதைரியம் உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். மனதில் நம்பிக்கையும் உறுதியும் கொள்ளுங்கள். எதிர்மறை எண்ணங்களை நீக்கி நேர்மறை எண்ணங்களை மேற்கொள்ளுங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. திட்டமிட்டு பணியாற்றுவது நல்லது.

மனக்குழப்பம் காரணமாக கோபமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி பாதிக்கப்படும்.

இன்று தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு சுமையாக தெரியும்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியமாய் இருக்க உடற் பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.


ரிஷபம்

இன்று உங்களுக்கு பயன் தரும் நல்ல மாற்றங்களைக் காணலாம். உங்கள் நகைச் சுவை போக்கு காரணமாக நன்மை விளையும்.

வேலை மாற்றம் அல்லது அது தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும்.

உங்களின் மகிழ்ச்சியான நகைச்சுவையான உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்தி நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் துணையும் மகிழ்ந்து பதிலுக்கு அன்பை செலுத்துவார்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். வங்கியில் சிறந்த பண இருப்பை பராமரிப்பீர்கள். .

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. ஆரோக்கியத்தில் பெரிய குறைபாடு காணப்படாது. என்றாலும் உடன் பிறந்தவர் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.


மிதுனம்

உங்கள் செயல்களை விரைந்து ஆற்றுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு முன்னேற்றகரமான பலன்களை அளிக்கும்.

உங்கள் பணியின் மூலம் நற்பெயர் பெறுவீர்கள். உங்களின் சுய முயற்சி மற்றும் புத்திசாலித்தனம் காரணமாக இது சாத்தியம் ஆகும்.

உங்கள் துணையிடம் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்கள் துணை கைபேசி வாங்கித் தரக் கோருவார். அவரது தேவையை பூர்த்தி செய்வீர்கள்.

நிதி நிலைமை மகிழ்ச்சி தரும் வகையில் செழிப்பாக இருக்கும். இன்று கணிசமான தொகை லாபமாகக் கிடைக்கும்.

பொதுவாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சி மற்றும் மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


கடகம்

வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் மகிழ்ச்சி அடைவீர்கள். உங்கள் செயல்களில் உணர்ச்சி வசப்படுவதைவிட யதார்த்தமாக இருப்பது நல்லது. இன்று அமைதியாக இருக்க வேண்டும்.

எப்பொழுதும் போல பணியாற்றினால் பணியிடத்தில் வெற்றி பெற இயலாது. சிறப்பாக பணியாற்ற உங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். பணியில் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்தும் மனநிலையில் இருக்க மாட்டீர்கள். உங்கள் துணையிடம் நகைச்சுவை அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாகக் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுப்படுத்தாவிட்டால் அதிக செலவுகளை சமாளிக்க இயலாது.

அசௌகரியம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.


சிம்மம்

உங்களின் வளர்ச்சி மற்றும் வெற்றி குறித்த கவலை காணப்படும். உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொண்டு முன்னேற விரும்புவீர்கள். இது உங்களுக்கு திருப்திகரமான உணர்வை அளிக்கும்.

பணியிடத்தில் சவால்கள் காணப்பட்டாலும் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் ஒத்துப் போக முடியாத வகையில் கருத்து வேறுபாடு ஏற்படும். எனவே அவருடன் அமர்ந்து அதனை தீர்த்துக் கொள்வது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாகக் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுப்படுத்தாவிட்டால் அதிக செலவுகளை சமாளிக்க இயலாது.

உணர்ச்சிகரமான மனநிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம்.


கன்னி

நீங்கள் சிறப்பாக செயல் புரிந்து வெற்றி பெறுவீர்கள். உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்வீர்கள்.

பணியிடத்தில் நன்மை விளையும். உங்கள் திறமையை நிரூபிக்க பல வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கருத்தை உங்கள் துணையிடம் வெளிப்படையாக கூறுவீர்கள். உங்கள் நம்பிக்கை உணர்வின் மூலம் இது சாத்தியம் ஆகும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சேமிப்பு பழக்கத்தை மேற்கொள்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். திருப்திகரமான, நகைச் சுவைபூர்வமான மனநிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


துலாம்

பிறருடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். இல்லையெனில் நற்பலன்கள் தாமதமாக விளையும். நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

பணியைப் பொறுத்த வரை கூடுதல் முயற்சி எடுக்க வேண்டும். பணி சம்பந்தமான பயணம் மேற்கொள்ள நேரும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற வாக்குவாதங்கள் நடத்துவீர்கள்.எனவே பேசும் போது கட்டுப்பாடு அவசியம்.

இன்று செழிப்பான நிதிநிலைக்கு உகந்த நாள் அல்ல. இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் சம்பாதிக்கும் திறன் குறைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும்.


விருச்சிகம்

உங்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதன் மூலம் நீங்கள் பிரச்சினைகளை குறைக்கலாம். கோவிலுக்கு செல்வதன் மூலம் ஆறுதலும் நிம்மதியும் கிடைக்கும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு ஒழுங்கு படுத்திக் கொள்வது சிறந்தது.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். உங்கள் துணையுடன் கோபமாக நடந்து கொள்வீர்கள். உங்களிடம் மகிழ்ச்சியான மன நிலை காணப்படாது. இதனால் இருவரிடையே முரண்பாடு ஏற்படும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய திட்டமிட வேண்டும்.

கண் தொற்று பாதிப்பு காணப்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

# இன்றைய ராசி பலன்கள் - 20.10.2023




இன்று சமநிலையான நாளாக இருக்காது. சில சூழ்நிலைகளை சமாளிப்பதன் மூலம் விஷயங்களை நன்கு புரிந்து கொள்ள இயலும். உங்களுக்கு இழப்புகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மேலதிகாரிகளுடனான உறவு நல்லுறவாக இருக்காது. மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவதை தவிர்த்திடுங்கள். அவர் சொல்வதைக் கேளுங்கள். இதனால் இருவரிடையே அன்பும் நல்லுறவும் வளரும்.

இன்று பண வரவு அதிகமாக இருக்காது. பணத்தை சேமிக்க வேண்டும். பணத்தை பாதுகாப்பதன் மூலம் இழப்பை தடுக்கலாம்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று பல வாய்ப்புகள் கிடைக்கலாம். அதனை முழுவதுமாக நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

இன்று அர்ப்பணிப்புடன், உங்கள் முயற்சி அனைத்தையும் செலுத்தி சிறப்பாக பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளையும் எளிதாக முடிக்கும் புரிந்துணர்வு உங்களிடம் காணப்படும்.

உங்கள் மனதில் அன்பு உணர்வு பொங்கிப் பெருகும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நிதி வளர்ச்சி சமூகமாக இருக்கும். உங்கள் குடும்ப நலனுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வலிமையுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்யும் நாளாக அமையும். பணம் அல்லது வேலை தொடர்பான புது முயற்சியில் இன்று நீங்கள் இறங்கலாம்.

உங்கள் பணியில் உற்சாகமான கட்டம். பணிகளை அமைதியாக கையாள வேண்டும். இதன் மூலம் பணியில் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையான பேச்சை பராமரிபீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். எதிர்கால நலன் கருதி இன்று சிறப்பாக திட்டமிடுவீர்கள்.

இன்று எந்தவிதமான ஆரோக்கியப் பிரச்சினையும் காணப்படாது. இன்று முழுவதும் உற்சாகமாக இருப்பீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய அன்றாட நடவடிக்கைகளில் எச்சரிக்கையான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். இன்று வளர்ச்சிக்கு அனுகூலமான நாள் அல்ல.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக கருதுவீர்கள். உங்கள் பணிகளில் தாமதம் காணப்படும். சிறப்பாக பணியாற்ற திட்டமிட்டு பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படாது. நல்லுறவைப் பராமரிப்பதில் தான் உறவின் நிலை சார்ந்துள்ளது. இதன் மூலம் இருவரிடையே உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

குடும்பத்திற்காக தேவையற்ற செலவு ஏற்பட்டு பணம் வீணாகலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். திட்டமிட்டு அதன்படி பணத்தை செலவு செய்யுங்கள்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.

